# DEPOSITION OF WITNESS

(See Rule 42)

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF Fast Track Court (At Magistrate Level )**

**PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **26/2026** |
| **பெயர்: PW-1** | **பிரேம்குமார்** |
| **தந்தை பெயர் :** | **வீரமணி** |
| **வயது:** | **39/2026** |
| **ஊர்:** | **மன்னங்காடு** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | ---- |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th **day of August 2026**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. எனக்கு எதிரியை எப்படி அறிமுகம் என்றால், Google இணையதளம் மூலம் அறிமுகம். எதிரியின் நிறுவனமான தீரா HR Solutions நிறுவனத்தில் இருந்து எனக்கு வேலை தருவதாக அனுகவில்லை என்று சொன்னால், சரிதான், ஆனால், தீரா HR Solutions நிறுவனம் Google இணையதளத்தில் வேலை Offer விளம்பரம் செய்தார்கள், அதனால் நான் அவர்கள் Office–ற்கு சென்று வேலை கேட்டேன். எப்போது நான் அவர் Office–ற்கு வேலை சம்பந்தமாக அனுகினேன் என்றால், டிசம்பர் 2024 ஆகும், குறிப்பாக தேதி ஞாபகம் இல்லை.

2. நான் எதிரிக்கு எந்தெந்த தேதிகளில் ரூ.2 இலட்சத்து 60 ஆயிரம் கொடுத்தேன் என்றால், எனது Gpay மூலம் உள்ளது, அது எனது mobile–ல் உள்ளது, அந்த தேதி என்னவென்றால், 18.12.2024 அன்று ரூ.1,50,000/–, 23.01.2025 ல் ரூ.50,000/–, 28.03.2025 ல் ரூ.20,000/–, 26.03.2025 ல் ரூ.40,000/– ஆக மொத்தமாக ரூ.2 இலட்சத்து 60 ஆயிரம் அனுப்பினேன்.

3. தீரா HR Solutions என்னை வேலைக்காக ஏதேனும் கம்பெனிக்கு Refer செய்தார்களா என்றால், செய்தார்கள், அந்த refer செய்யப்பட்ட கம்பெனி வேலைக்காக ஏதேனும் interview நடத்தினார்களா என்றால், இல்லை, என்னுடைய Resume–ஐ மட்டும் பெற்றுக்கொண்டு என்னை

அனுப்பிவிட்டார்கள், பின்பு கூப்பிடுவோம் என்று கூறினார்கள்.

4. எதிரி நிறுவனமான தீரா HR Solutions என்னை ஒரு நிறுவனத்திற்கு வேலைக்காக refer செய்தார்கள் என்றும், அந்த refer செய்யப்பட்ட கம்பெனி என்னை நேர்கானல் செய்தார்கள் என்றும், அந்த நேர்கானலில் நான் Unfit என்று அந்த நிறுவனம் முடிவுசெய்ததால் எனக்கு வேலை கொடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல,என்னுடைய Resume–ஐ மட்டும் பெற்றுக்கொண்டு என்னை அனுப்பிவிட்டார்கள், பின்பு கூப்பிடுவோம் என்று கூறினார்கள்.

5. நான் முதன் முதலில் எதிரியின் நிறுவனத்தை எதற்காக அனுகினேன் என்றால், நான் சிங்கப்பூரில் வேலை செய்வதற்காக வேலை ஏதேனும் கிடைக்கமா என்று அவர்களை அனுகினேன்.

6. நான் என்ன படித்துள்ளேன் என்றால், M.Sc. IT ஆகும்.

7. நான் முதன் முதலில் எதிரியின் நிறுவனத்தை சிங்கப்பூரில் வேலை செய்வதற்காக வேலை ஏதேனும் கிடைக்குமா என்று தான் அந்நிறுவனத்தை அனுகினேன் என்றும், இந்தியாவிலேயே வேலை ஏற்பாடு செய்து கொடுக்குமாறு அனுகவில்லை என்று சொன்னால், சரிதான், முதன்முதலில் வெளிநாட்டில் வேலை செய்வதற்காக தான் அனுகினேன்.

8. எதிரியின் நிறுவனம் என்னை 10 நிறுவனத்திற்கு பரிந்துரை செய்தார்கள் என்றும், அந்த 10 நிறுவனத்திலும் என்னை நேர்கானல் செய்தார்கள் என்றும், அந்த 10 நிறுவனமும் என்னை Unfit என்று முடிவெடுத்து எனக்கு வேலை கொடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல.

**(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

ற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.